**இலங்கை மஹாவலி அதிகாரசபை மற்றும் அதன் துணைக் கம்பனிகளை உள்ளடக்கிய தொகுதி - 2020**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை மஹாவலி அதிகாரசபை மற்றும் அதன் துணைக் கம்பனிகளை உள்ளடக்கிய தொகுதியின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் காரணமாக அதிகாரசபை மற்றும் அதன் துணைக் கம்பனிகளை உள்ளடக்கிய தொகுதியின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு

வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது ஆணைக்குழுவை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு ஆணைக்குழு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபையின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ''திட்டமிட்டு பேணுதல்'' நிறுவகத்திற்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | உரிய நியமங்களின் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகார சபையினால் 8,708 கிலோ மீற்றர் அளவான வாய்க்கால் வழிகள் ரூபா 74,989,140,000 தொகைக்கு முதல் தடவையாக நிலையான சொத்தாக நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பிரகாரம் அந்த வாய்க்கால் வழிகள் மதிப்பீடு செய்யப்பட்ட முறை மற்றும் அதற்குரிய கணக்கீட்டு கொள்கை என்பன நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அந்த வாய்க்கால் வழிகள் நிலையான சொத்து பதிவேட்டிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | வாய்க்கால் வழிகளின் மீள் மதிப்பீட்டு பெறுமதி ''ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்'' இன் கீழ் நிதிக்கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், இது தொடர்பாக கணக்கீட்டு கொள்கை குறிப்பு இலக்கம் 3.2 இன் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் வாய்க்கால் வழிகள் மதிப்பீடு செய்யப்பட்ட முறை மற்றும் அதற்குரிய கணக்கீட்டு கொள்கைகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டியதுடன், நிலையான சொத்து பதிவேட்டிலும் குறிப்பிடப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் பொதுத் துறைகளின் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி | அதிகார சபையினால் பராமரிக்கப்படுகின்ற 12 பிரதான தோட்டங்கள் மற்றும் 463 குளங்களின் உரித்து தொடர்பாக விரிவான | அதிகார சபைக்குச் சொந்தமான சொத்துகள் கணக்கீடு செய்யப்பட |

| | | | |
|---|---|---|---|
| | சொத்துக்கள் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அதிகார சபையினால் பராமரிக்கப்படுகின்ற 12 பிரதான தோட்டங்கள் மற்றும் 463 குளங்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பரிசோதனை செய்யப்பட்டு அவைகள் ஏனைய திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களில் ஏதாவது ஒன்றின் உரிமையின் அடிப்படையில் இறுதிக் கணக்குகளில் நிலையான சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ளதா என பரீட்சித்து அதன் பிரகாரம் எதிர்காலத்தில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் நியாயமான பெறுமதி கவனத்தில் கொள்ள வேண்டிய அளவு மாற்றம் மற்றும் துரிதமாக மாற்றமடையும் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு நியாயமான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அதிகார சபையினால் 1984 - 1989 காலப் பகுதியின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 64,320,853 கிரயமான 02 காணி கூறுகள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், அவைகளின் கிரயமேனும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அதிகார சபையினால் தமது வலய அலுவலகம், பிரிவுகள், உத்தியோகபூர்வ விடுதிகள் மற்றும் சுற்றுலா விடுதிகள் போன்றவை அமைந்துள்ள காணிகளும் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அந்த 02 காணி கூறுகளுக்கு உரிய மதிப்பீட்டு அறிக்கையை பெற்றுக் கொள்வதற்காக மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அந்த மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்காக வழங்குவதற்கு அதிகார சபைக்கு காணியின் உரித்து தொடர்பான உறுதிப்படுத்தல் கடிதம் (உரித்துறுதி) சமர்ப்பிப்பதற்கு முடியாதிருந்தமையின் காரணமாக உரிய மதிப்பீட்டு அறிக்கை இதுவரை பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது. அதனால் உரிய உரித்துறுதி பிரதிகள் பெற்றுக் கொள்ளப்பட்டு 2021 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | அதிகார சபைக்குச் சொந்தமான சொத்துகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| புனருத்தாபனம் மற்றும் அபிவிருத்தி செய்யும் செலவினங்களில் உருவான மூலதன தன்மையுடைய சொத்துக்கள் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு பொருத்தமான கணக்கீட்டு கொள்கையொன்று அறிமுகப்படுத்தப்படாதிருந்ததுடன், பிரதான தோட்டங்கள் மற்றும் நீர்த் தேக்கங்களின் செயற்பாட்டு பிரிவின் ரூபா 15,023,938 தொகையான வருமான செலவினங்கள் புனருத்தாபனம் மற்றும் அபிவிருத்தி செய்யும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதனால் ஆண்டின் பற்றாக்குறை அந்த அளவினால் அதிகரித்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | நாட்குறிப்புக்களின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | புனருத்தாபனம் மற்றும் அபிவிருத்தி செய்யும் செலவினங்களில் இருந்து உருவான மூலதன தன்மையான சொத்துக்களை கணக்கீடு செய்வதற்கு பொருத்தமான கணக்கீட்டு கொள்கையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |

### 1.5.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2015 - 2018 காலப்பகுதியில் ரூபா 80,000,000 செலவில் வெலிக்கந்த மற்றும் வெலிஓயா வலயங்களில் நிர்மாணக்கப்பட்ட 30 நீர் சுத்திகரிப்பு இயந்திர கூடங்கள் நிலையான சொத்தாக கணக்கீடு செய்வதற்கு பதிலாக செலவினமாக பதிவழிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக ஆண்டின் பற்றாக்குறை அந்த அளவினால் அதிகரித்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே அவற்றின் நிர்வாக நடவடிக்கைகள் உடன்படிக்கை செய்யப்படாமல் விவசாய அமைப்புக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. | அதிகார சபையின் நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம் மற்றும் ஒன்றிணைந்த மஹாவலி ட மற்றும் எல் வலயங்களின் அண்மித்த 30 நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் ரூபா 80 மில்லியன் செலவில் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன், அந்த இயந்திரங்கள் சமூக அடிப்படையிலான அமைப்புக்களுக்கு முறையானதாக (ஒதுக்கப்பட்டுள்ளது) கையளிக்கப்பட்டுள்ளது. அவற்றின் பராமரிப்பு மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் மஹாவலி அதிகார சபையின் மேற்பார்வையின் கீழ் அந்த சமூக அடிப்படை அமைப்புக்களினால் | மூலதன செலவினங்கள் நிலையான சொத்தாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மேற்கொள்ளப்படுகின்றது. அதன் பிரகாரம் இந்த கிரயங்கள் செலவின தலைப்பு 2815 இன் கீழ் செலவினமாக இறுதிக் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | அணை பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் திட்டமிடல் செயற்திட்டத்திலிருந்து அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்ட ரூபா 671,503,748 கிரயமான நிலையான சொத்து தொகுதியொன்று ரூபா 537,950,118 தொகையில் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், எஞ்சிய ரூபா 13,355,630 தொகையான சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இந்த சொத்துக்கள் மற்றும் மொறகஹகந்த செயற்திட்டத்தினால் கையளிக்கப்பட்ட ரூபா 31,764,287,274 பெறுமதியான மொறகஹகந்த நீர் மின்சாரவலு கூடத்திற்கு சொந்தமான சொத்துக்கள் மானியமாக கணக்கீடு செய்யப்படாமல் கடன் கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதனால் அதிகார சபையின் நடைமுறைப் பொறுப்புக்கள் மற்றும் தேறிய சொத்துக்கள் முறையே ரூபா 32,302,237,392 தொகை அதிகரித்தும் குறைத்தும் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | இதுவரை கணக்கீடு செய்யப்படாத சொத்துக்களின் பெறுமதியில் ரூபா 12,561,000 பெறுமதியான சொத்துக்கள் மொறகஹகந்த செயற்திட்டத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் அந்த சொத்துக்கள் செயற்திட்டத்தின் நிலையான சொத்து பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த சொத்துக்கள் செயற்திட்டத்தின் மூலம் கையளிக்கும் போது முறையான திட்டமுறைமையொன்று பின்பற்றப்படாதிருந்தமையின் காரணமாக எஞ்சி காணப்படுகின்ற சொத்துக்களை கணக்கீடு செய்வதில் உரிய பிரச்சினைகள் காணப்பட்டது. அந்த பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு மொத்த பெறுமதியும் ''மானியமாக'' 2021 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்பதை அறியத்தருகின்றோம். மொறகஹகந்த செயற்திட்டம் இது வரையிலும் செயற்பாட்டுடன் காணப்படுகின்ற செயற்திட்டமாகும். இந்த செயற்திட்டத்தின் மூலம் ரூபா 31,764,284,274 பெறுமதி மொறகஹகந்த நீர் மின்வலு கூடம் அதிகார சபைக்கு கையளிக்கும் வரை மொறகஹகந்த செயற்திட்டத்தின் கணக்குகளில் நிலையான | சொத்துக்களை முறையான பிரகாரம் கையேற்று கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | சொத்துக்கள் கணக்குகளில் இருந்து அகற்றப்பட்டு ‘‘கடன் பட்டோர்’’ ஆக காண்பிக்கப்பட்டுள்ளதுடன், செயற்திட்டம் செயற்படு நிலையில் காணப்படுகின்றமையினால் அதிகார சபையினால் அதற்கு சமமாக அது ‘‘கடன்கொடுத்தோர்’’ ஆக காண்பிக்கப்பட்டுள்ளது. செயற்திட்டம் பூர்த்தியடையும் நாளின் போது செயற்திட்டத்தை கணக்குகளில் வருமானத்திற்கு/ நிதியத்திற்கு எதிராக பதிவழிக்க வேண்டி ஏற்படுமாயின் அப்போது ‘‘மானியமாக’’ அதிகார சபையின் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்க முடியும் என்பதை அறியத்தருகின்றோம். | |

### 1.5.5 ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்களை தயாரித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மஹாவலி கால்நடைவள மற்றும் கமநல முயற்சி (தனியார்) கம்பனி மற்றும் மஹாவலி ஆலோசனை சேவைகள் பணியகம் (தனியார்) கம்பனி என்பவற்றின் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்கள் 2021 யூலை 01 ஆம் திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் அதிகார சபையின் நிதிக் கூற்றுக்களை அக்கம்பனிகளின் நிதிக்கூற்றுக்களுடன் ஒன்றிணைக்கும் போது கணக்காய்வு செய்யப்படாத நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தது. | அதிகார சபை தனது துணைக் கம்பனிகளின் கணக்குகளை ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கும் போது ஒவ்வொரு வருடமும் கணக்காய்வு செய்யப்படாத கணக்குகள் பயன்படுத்தப்பட்டிருந்தது. துணைக் கம்பனிகளும் ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி 28 ஆம் திகதிக்கு முன்னர் தமது நிதிக் கூற்றுக்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்தமையினால் அந்த நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு செய்யப்பட்டு கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு ஒன்றிணைந்த நிதிக் | ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கும் போது உரிய துணைக் கம்பனிகளின் நிதிக் கூற்றுக்களுடன் குறித்த திகதியில் உள்ளவாறு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கூற்றுக்கள் தயாரிக்கப்படுமாயின் ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி 28 ஆம் திகதிக்கு முன்னர் நியதிச் சட்டத்தேவையின் அடிப்படையில் ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட முடியாதிருந்தது. எவ்வாறாயினும் வரையறுக்கப்பட்ட மஹாவலி கால்நடை வள மற்றும் கமநல முயற்சி (தனியார்) கம்பனி 2021 பெப்வரி 24 ஆம் திகதி அந்த கம்பனியின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் வரையறுக்கப்பட்ட மஹாவலி ஆலோசனைச் சேவைகள் பணியகம் (தனியார்) கம்பனி அந்த கம்பனியின் காணப்படுகின்ற சட்ட ரீதியான சில பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டதன் பின்னர் தமது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் தமது வருடாந்த நிதிக் கூற்றுக்களை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருந்தது. | |

### 1.5.6 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் இன்மை

| | விடயம் | தொகை | வழங்கப்பாடாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | முதலீடு | 20,477,000 | பங்குச் சான்றிதழ் | இது தொடர்பாக கண்டறிந்து எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய மீதி உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | சேமிப்பு கணக்கு | 2,632,908 | மீதி உறுதிப்படுத்தல் மற்றும் பாஸ் புத்தகம் | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | நிலையான வைப்பு | 727,481 | வைப்புச் சான்றிதழ் மற்றும் மீதி உறுதிப்படுத்தல். | -மேற்படி- | -மேற்படி- |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மஹாவலி அதிகார சபையினால் அமுல்படுத்தப்படுகின்ற கடன் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அதிகார சபையினால் பரிந்துரை செய்யப்பட்ட மக்களுக்கு கடன் வழங்குவதற்காக பிரதேச அபிவிருத்தி வங்கிக்கு வழங்கப்பட்ட தொகையில் ரூபா 150,703,811 தொகையான கடன் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய ஒவ்வொரு கடன்பட்டோர் மீதி மற்றும் காலப்பகுப்பாய்வு என்பன நிதிக் கூற்றுக்களின் குறிப்புக்களின் மூலம் வெளிப்படுத்தபடவில்லை. | 2021 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களுடன் ஒவ்வொரு கடன்பட்டோர் மீதியும் காலப்பகுப்பாய்வும் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | விநியோகிக்கப்பட்டுள்ள ஒட்டுமொத்த கடன் தொகைக்கும் உரிய ஒவ்வொரு கடன் பட்டோர் மீதி பட்டியலொன்றும் மற்றும் கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வும் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் III ஆம் அத்தியாயத்தின் | ஒவ்வொரு தொகுதிக்கும் உரிய பணி நிலையத்தில் சேவையாற்றக்கூடிய ஆகக்கூடிய காலப்பகுதி நிர்ணயிக்க வேண்டியிருந்த போதும் அதிகார | இடம் மாற்ற செயல் நடைமுறையின் பிரகாரம் வருடாந்த இடம் மாற்றம் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது காணப்படுகின்ற தொற்று நோய் நிலைமையின் அடிப்படையில் மேற்கொள்வதற்கு | தாபன விதிக் கோவைக்கு இணங்க அதிகார சபையின் இடமாற்றல் நடைமுறை தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | 3.8.2 ஆம் பிரிவு | சபையின் இடம் மாற்றல் சபையினால் தயாரிக்கப்பட்ட இடம் மாற்ற நடைமுறையில் அதன் பிரகாரம் ஆகக் கூடிய காலப் பகுதியொன்று நிர்ணயிக்கப்பட்டிருக் கவில்லை. அதன் காரணமாக கணக்காய்வு திகதியான 2021 பெப்ரவரி 02 ஆம் திகதி வரையில் மஹாவலி பாதுகாப்பு படை அணியில் சிவில் பதவியணியினரில் 11 உத்தியோகத்தர்கள் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமும், 13 ஊழியர்கள் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமும், 06 பேர் 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகவும் சேவையாற்றிக் கொண்டிருந்தனர். | முடியாதிருந்த போதிலும், தற்போது பாதுகாப்பு தரப்பினர் உரிய பிரகாரம் உள்ளக வேலைகளில் நியமிக்கப்பட்டுள்ளனர். அவ்வாறே சிவில் பதவியணியினரையும் அதன் பிரகாரம் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு | நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களுடன் வரைவு வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. | 2021 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிப்பதற்கு குறித்துக் கொள்கின்றோம். | நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை சுற்றறிக்கையின் நியதிகளின் பிரகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | கட்டுப்பாட்டாளர் நாயக அலுவலகத்தின் 2018 திசெம்பர் 31 ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட நிதியல்லா சொத்துக்களை மதிப்பீடு செய்யும் வழிகாட்டிக் கோவை | | | |
| (i) | 2.1 ஆம் பந்தி | அரசாங்கத்திற்குச் சொந்தமான சகல காணிகளையும் மதிப்பீடு செய்தல் தேவையாக இருந்ததுடன், அதன் போது அரசாங்கத்தின் அலுவலகங்கள், விடுமுறை விடுதிகள், வேலைத்தளங்கள் போன்றவற்றில் அமைந்துள்ள அரசாங்கத்தின் காணிகளை மதிப்பீடு செய்வதற்கு முன்னுரிமை வழங்கப்பட்ட வேண்டிய போதிலும், அதிகார சபையின் அலுவலகங்கள், விடுமுறை விடுதிகள் மற்றும் வேலைத்தளங்கள் போன்றவை அமைந்துள்ள காணிகளை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணிகள் அரசாங்கத்தின் காணியாக இருந்ததுடன் முகாமைத்துவ மற்றும் நிர்வாக நடவடிக்கைகளுக்காக மாத்திரம் அதிகார சபைக்கு அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அதிகார சபைக்காக வர்த்தமானியின் மூலம் வெளியிடப்பட்டுள்ள அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற காணிகளில் மஹாவலி அதிகார சபையின் அலுவலகத்தை நடாத்திச் செல்லல், சேவை வழங்குவதற்கு தேவையான கட்டடங்களை நிர்மாணித்தல் மற்றும் மக்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக காணியினை பயன்படுத்தும் உரித்து காணப்படுவதுடன், அந்த காணிகளின் மூல உரித்து மஹாவலி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமில்லை. அவ்வாறே அபிவிருத்தி பணிகளுக்காக ஈடுபடுத்தப்படுகின்ற காணிகள் மஹாவலி மக்களின் முயற்சியாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்றது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் அதிகார சபையின் நடவடிக்கைகளுக்கா பயன்படுத்தும் அரசாங்கத்தின் காணிகளை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | இதன் போது விவசாய வகுப்பின் நபர்களுக்கு காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் குவித்தல், நீர்ப்பாசனம் மற்றும் கமநல மற்றும் வருடாந்தம் மழைவீழ்ச்சியுள்ள காணிகள் இலவசமாக வழங்கப்பட வேண்டியிருந்ததுடன், தொழில் முயற்சியாளர்களுக்கும் அதிக வருமான தொகுதியின் நபர்களுக்கும் அரசாங்கத்தின் காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் வணிக மற்றும் முதலீட்டு காணியாக அரசாங்கத்தின் மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகைப் பணம் அறவிடல் மற்றும் வீடுகளின் காணியாக அரசாங்கத்தின் மதிப்பீட்டு பெறுமதி அறவிடப்பட்டு பகிர்ந்தளிக்கப்படுகின்றது. | |
| (ii) | 2.2 ஆம் பந்தி | புராதன மரபுரிமையாக இனங்காணப்பட்ட கட்டிடங்கள் தவிர ஏனைய சகல கட்டிடங்களும் மதிப்பீடு செய்யப்பட்டு கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு கட்டிடங்கள் தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அந்த தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | முன்னைய ஆண்டிற்குரிய தகவல்கள் நாளது வரையாக்கப்பட்டு கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மீளாய்வாண்டிற்கான தகவல்களை நாளது வரையாக்குவதற்கு காணப்படுகின்ற தொற்று நோய் நிலைமையினால் அலுவலகங்களை மூடவேண்டி ஏற்பட்டதன் காரணமாக தாமதமடைந்திருந்ததுடன், விரைவாக அந்த தகவல்களை நாளது வரையாக்கி கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு | சுற்றறிக்கையின் நியதிகளின் பிரகாரம் கட்டிடங்களை மதிப்பீடு செய்து அது தொடர்பான விபரங்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | சமர்ப்பிப்பிதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஈ) | 2009 திசெம்பர் 24 ஆம் திகதிய 2009/12/14/ நிர்வாகம் ஆம் இலக்க அதிகார சபையின் உள்ளக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவு | ஏனைய நிறுவனங்களின் அரசாங்க ஊழியர்களிடம் இருந்து உத்தியோகபூர்வ விடுதி வாடகையாக மாதாந்த சம்பளத்தில் 12.5 சதவீதம் மாதாந்த வாடகையாக அறவிட வேண்டியிருந்த போதிலும், அதற்கு முரணாக கணக்காய்வு திகதியான 2021 பெப்ரவரி 08 ஆம் திகதி அளவில் திகன பிரதான அணை மற்றும் நீர்த்தேக்க செயற்பாட்டு பிரிவிற்கு சொந்தமான 39 உத்தியோகபூர்வ விடுதிகளுக்காக பல்வேறு மாதாந்த கட்டணங்கள் அறவிடப்பட்டிருந்தன. | ஏனைய நிறுவனங்களின் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ விடுதிகளுக்காக விடுதி வாடகையாக மாதாந்தம் சம்பளத்தில் 12.5 சதவீத தொகையொன்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறே அறவிடப்படாத உத்தியோகபூர்வ விடுதிகள் பெறப்பட்டு உத்தியோகத்தர்களின் உரித்தினை மீள கையளிப்பதற்கு 2018 ஆம் ஆண்டின் போது தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை நியதிகளுக்கு இணங்க உத்தியோகபூர்வ விடுதிகளுக்கான கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2017 மே 09 ஆம் திகதிய டீஜீ/05/2017 ஆம் இலக்க அதிகார சபையின் உள்ளக சுற்றறிக்கையின் | | | |
| (i) | ஏ 1-1 ஆம் பிரிவு | வலயத்தின்/ பிரிவின் விடுதி குழுவின் மூலம் உத்தியோகத்தர்களின் உத்தியோகபூர்வ | திகன உத்தியோகபூர்வ விடுதி தொகுதியில் அதிகார சபையின் ஊழியர்களுக்கு வதிவிட வசதிகளை வழங்கியதன் பின்னர் மேலதிகமாக | சுற்றறிக்கையின் நியதிகளின் பிரகாரம் வெளிவாரி அரசாங்கத்தின் உத்தியோகத்தர்களுக்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | விடுதிகளின் தேவை இனங்காணப்பட்டு பணிப்பாளர் நாயகத்தின் முன் அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் வெளிவாரி அரசாங்கத்தின் உத்தியோகத்தர்களுக்கு உத்தியோகபூர்வ விடுதிகளை வழங்க வேண்டியிருந்த போதிலும், அதற்கு முரணாக பிரதான அணை மற்றும் நீர்த்தேக்க செயற்பாட்டு பிரிவுகளினால் 05 உத்தியோகபூர்வ விடுதிகள் வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்தன. | உத்தியோகபூர்வ விடுதிகள் காணப்படுமாயின் வெளிவாரி அரசாங்க நிறுவன உத்தியோகத்தர்களுக்காக விண்ணப்பத்தின் பிரகாரம் தற்காலிகமாக வழங்குமாறு சுற்றறிக்கையின் இலக்கம் A1-2 ஆம் பிரிவின் மூலம் வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது வரையும் ஆரம்பம் முதல் வெளி நிறுவனங்களுக்கு உத்தியோகபூர்வ விடுதிகளை வழங்கும் போது வீட்டுக் குழுவின் ஊடாக தீர்மானங்களை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும் சுற்றறிக்கையின் பிரகாரம் இந்த விடுதிகளுக்குரிய அரசாங்க நிறுவனங்களின் தலைவர்களின் பரிந்துரையின் பிரகாரம் தற்காலிக அடிப்படையில் முறையான வருடாந்த உடன்படிக்கைகளின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் 2021 ஆம் ஆண்டு முதல் உள்ளக சுற்றறிக்கையின் A1-1 பிரிவின் பிரகாரம் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உத்தியோகபூர்வ இல்லங்களை வழங்குதல் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) | ஏ 1.17 ஆம் பிரிவு | முறையான எழுத்து மூல கையளித்தல் ஆவணம் மற்றும் இணங்கப்பட்ட உடன்படிக்கையின் கீழ் மாத்திரம் உத்தியோகபூர்வ | இலங்கை மின்சார சபையின் ஊழியர்களின் குடியிருப்பிற்காக 1985 ஆம் ஆண்டு முதல் அதிகார சபைக்குரிய திகன நிலகம விடுதி தொகுதியின் 24 வீடுகள் | சுற்றறிக்கை நியதிகளின் பிரகாரம் முறையான எழுத்த மூல ரைகயளித்தல் ஆவணம் மற்றும் இணக்கப்பாட்டு உடன்படிக்கையின் |

விடுதிகள் வெளிவாரி அரசாங்க நிறுவனத்தின் உத்தியோகத்தர்களுக்கு வழங்க வேண்டியிருந்த போதிலும், அதற்கு முரணாக திகன பிரதான அணை மற்றும் நீர்த்தேக்க செயற்பாட்டு பிரிவிற்கு சொந்தமான 24 உத்தியோகபூர்வ விடுதிகள் உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமல் இலங்கை மின்சார சபையின் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த உத்தியோகபூர்வ விடுதிகள் 1985 / 1986 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டிருந்ததுடன், அவற்றின் தற்போதைய குடியிருப்பாளர்களை இனங்கண்டு அவர்கள் உரிய விடுதிகளுக்காக உரித்துள்ள ஊழியர்களாக இருக்குமாயின் அவர்களுடன் உடன்படிக்கை செய்வதற்கோ அல்லது அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் ஆயின் அனுமதியற்ற குடியிருப்பை அகற்றுவதற்கு தேவையான சட்ட ரீதியான நடவடிக்கைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

வழங்கப்பட்டுள்ளது. இதற்காக குறித்துரைத்த வாடகைத் தொகையொன்று குடியிருப்பாளர்களிடம் இருந்து அறவிட்டு இது வரை அதிகார சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதிகார சபையின் உள்ளக சுற்றறிக்கையின் பிரகாரம் விடுதிகளின் குடியிருப்பாளர்கள் இனங்காணப்பட்டு அவர்களுக்கு எமது நிறுவனங்களுடன் உடன்படிக்கை செய்யுமாறு எழுத்து மூலம் பல தடவைகள் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த ஆலோசனைகளுக்கு எந்தவொரு பதிலும் காண்பிக்கப்படவில்லை. எனினும் விடுதிகளின் குடியிருப்பாளர்கள் 2002 ஆம் ஆண்டின் போது மாத்திரம் தீர்மானிக்கப்பட்ட குறித்த தொகையொன்றை வீட்டு வாடகையாக மாதாந்தம் அறவிட்டு அந்த பணம் உரிய அதிகாரசபைக்கு அனுப்பப்பட்டுள்ளது. இலங்கை மின்சார சபையின் ஊழியர்கள் உடன்படிக்கை கைச்சாத்திடாமை தொடர்பாக பணிப்பாளர், பிரதான அணை மற்றும் நீர்த்தேக்க செயற்பாடுகளினால் பல தடவை கடிதம் அனுப்பப்பட்ட போதும் அதற்குப் பதில் வழங்கப்படாமையின் காரணமாக எனது கையொப்பத்துடன் இலங்கை மின்சார சபையின் தலைவருக்கு எழுத்து மூலம்

கீழ் மாத்திரம் உத்தியோகபூர்வ இல்லங்களை வெளிவாரி அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அறிவிக்கப்பட்டுள்ளது. இது வரை இந்த கடிதங்களுக்கு திருப்திகரமான பதிலொன்று கிடைக்காதிருந்ததுடன், இலங்கை மினசார சபையின் மத்திய மாகாண பிரதேச முகாமையாளரால் அந்த ஊழியர்கள் மின்சார சபையுடன் உள்ளக உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தமை காண்பிக்கப்பட்டுள்ளது. மேலும் மின்சார சபை இந்த உத்தியோகபூர்வ விடுதிகளை கையேற்றுள்ளதுடன், அவர்களினால் பராமரிப்பு நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்ததுடன், எங்களுடன் உடன்படிக்கை செய்வதற்கு தேவை இல்லாதிருந்ததாக மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும், இது தொடர்பாக அறிவித்து எதிர்கால நடவடிக்கைகளுக்காக செயலாளர், மின்சார சபை அமைச்சுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (iii) | ஏ 3 மற்றும் சீ - 1 ஆம் பிரிவுகள் | அதிகார சபையின் விடுதிகள் மற்றும் கட்டிடங்கள் தொகுதிகளாக்கப்பட்டு தனித்தனியாக சொத்துப் பதிவேட்டில் பேணப்பட வேண்டியிருந்த போதிலும், பிரதான அணைக்கட்டு மற்றும் நீர்த்தேக்க | திகன உத்தியோகபூர்வ இல்ல கட்டிடத்தொகுதியில் உத்தியோகபூர்வ விடுதிகளின் நிர்வாக பொறுப்பு அதிகார சபையின் மூன்று பிரிவுகளின் மூலம் அமுல்படுத்தப்படுகின்றது. அதாவது, வதிவிட வியாபார முகாமையாளர் (ஈ வலையம்) மஹாவலி | சுற்றறிக்கையின் நியதிகளின் பிரகாரம் உத்தியோகபூர்வ விடுதிகள், கட்டிடங்களை பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செயற்திட்ட பிரிவினால் உத்தியோகபூர்வ விடுதிகள் மற்றும் கட்டிடங்கள் தொகுதிகளாக்கப்பட்டு நிலையான சொத்துப் பதிவேடு பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் பேணிச் செல்லல் பொருளாதார ரீதியில் ஆக்கபூர்வமாக இல்லாத விடுதிகள் அல்லது கட்டிடங்கள் உரிய பிரகாரம் இனங்காணப்பட்டு அது தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான முன்மொழிவுகள் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. சரியான பிரகாரம் பராமரிப்பு செய்யப்படாமையினால் காடுகள் வளர்ந்து கைவிடப்பட்டுள்ள 03 உத்தியோகபூர்வ விடுதிகள் காணப்பட்டன. | பாதுகாப்பு படையணி மற்றும் பிரதான அணைக்கட்டு மற்றும் நீர்த்தேக்க செயற்பாட்டு பிரிவுகள் என்பனவாகும். இதனிடையே திகன பிரதான அணைக்கட்டு மற்றும் நீர் தேக்க செயற்பாட்டு பிரிவின் மூலம் கட்டுப்பாடு மற்றும் பராமரிக்கப்படுகின்ற வீடுகளின் எண்ணிக்கை 85 ஆகும். எதிர்காலத்தில் இந்த வீடுகள் மற்றும் கட்டிடங்களை சரியான பிரகாரம் பராமரிப்பதற்கு காணப்படுகின்ற நிதி ஏற்பாடுகளின் வரையறையின் அடிப்படையில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். உள்ள சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் 2021 ஆம் ஆண்டில் சொத்து பதிவேடுகளை நாளது வரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஊ) | 2017 மார்ச் 08 ஆம் திகதிய DG/04/2017 ஆம் இலக்க அதிகார சபையின் உள்ளக சுற்றறிக்கை. | விவசாய அமைப்புக்களுக்கு ஒப்பந்தம் ஒன்றை வழங்கும் போது பகுதி முகாமையாளர், நிறுவன அபிவித்தி உத்தியோகத்தர், பொறியியல் உதவியாளர், பிரிவு முகாமையாளர், பிரதி வதிவிட வியாபார | பணிப்பொறுப்பு பொறியியலாளர் அலுவலகத்தினால் சமூர்த்தி சங்கம், விவசாய சேவை, விவசாய அமைப்பு மற்றும் மஹாவலி அதிகார சபையின் விவசாய அபிவிருத்தி மற்றும் ஏனைய பதிவு செய்யப்பட்ட அமைப்பக்களுக்கு ஒப்பந்தங்கள் | சுற்றறிக்கையின் நியதிகளின் பிரகாரம் விவசாய சங்கத்திற்கு நேரடியாக ஒப்பந்தத்தை வழங்கும் போது உரிய உத்தியோகத்தின் பரிந்துரையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| முகாமையாளர் (அபிவிருத்தி), பிரதி வதிவிட வியாபா முகாமையாளர் (தொழில்நுட்ப சேவைகள்) என்ற உத்தியோகத்தரினால் ஒப்பந்தங்களை வழங்கல் தொடர்பாக தமது பரிந்துரையை எழுத்து மூலம் வதிவிட வியாபார முகாமையாளர் / செயற்திட்ட பணிப்பாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட வேண்டும். எனினும், பரவுகின்ற போவதென்ன பணிப்பொறுப்பு பொறியியலாளர் அலுவலகத்தினால் கண்டலம குளக்கட்டு பராமரிப்பு நடவடிக்கைகளுக்கு ஊழியர்களை பெற்றுக் கொள்வதற்காக ரூபா 1,430,000 பெறுமதியில் கண்டலம வம் எல மஹாவலி விவசாய அமைப்பிற்கு நேரடியாக ஒப்பந்தங்களை வழங்கும் போது மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் மேற்கூறப்பட்ட உத்தியோகத்தர்களின் பரிந்துரையொன்று இன்றி பிரிவு முகாமையாளரின் பரிந்துரையின் அடிப்படையில் மாத்திரம் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. | கையளிக்கப்படுகின்றது. மஹாவலி விவசாய அமைப்பிற்கு ஒப்பந்தத்தை கையளிக்கும் போது உரிய ஆவணங்கள் விவசாய அமைப்பிற்குரிய பிரிவு முகாமையாளருக்கு அனுப்பப்படுவதுடன், அதன் போது பிரிவு முகாமையாளரினால் உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் பரீட்சித்து பரிந்துரை சமர்ப்பிக்கப்படுகின்றது. | எடுக்கப்பட வேண்டும். |

## 1.8 வரி பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி (திருத்தப்பட்ட) சட்டத்தின் 10 (ஆ) பிரிவு. | 12 மாத கால எல்லையில் பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்கல்களின் மொத்த பெறுமதி ரூபா 12 மில்லியனை விஞ்சுமாயின் சட்டத்தின் கீழ் பெறுமதி சேர் வரிக்காக பதிவு செய்ய வேண்டியிருந்த போதிலும், அதிகார சபையினால் உரிய வருமானம் முன்னைய ஆண்டின் போது ரூபா 1,920 மில்லியன் மற்றும் மீளாய்வாண்டில் ரூபா 755 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்ட போதிலும், பெறுமதி சேர் வரிக்காக பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அதிகார சபையின் பிரதான வருமான மூலமான காணி, மணல், மண், நீர் போன்ற இயற்கை வளங்களின் மூலம் கிடைக்கின்ற காணி வரி மற்றும் இறையாக (காணி கையாளல் கட்டணம்) இயற்கை வளங்களின் மூலம் பெறப்படுகின்ற வருமானமாக இருந்ததுடன், இந்த இயற்கையான வளங்கள் அந்த முறையில் அதாவது, பெறுமதியை அதிகரிப்பதற்கு மீண்டும் உற்பத்தி செய்யப்படாமல் (No Manufacturing) சேவையினை வழங்குவதற்காக பெறப்படுகின்ற வருமானமாக இருந்தமையினால் அந்த வருமானம் பெறுமதி சேர்த்தல் வரியின் கீழ் இல்லாதிருந்தமையை அறியத்தருகின்றோம். எனினும் இயற்கை வளமொன்றான நீர் ஏனைய நிறுவனத்திற்கு / நபர்களுக்கு விற்பனை செய்யப்படும் போது அந்த இயற்கையான வளத்திற்கு ஏதாவது பெறுமதியொன்று சேர்க்கப்படுகின்றது. அவ்வாறே நீர் வாடகைக்கு வழங்குதல் (விற்பனை செய்தல்) அடிப்படையில் உழைக்கப்படுகின்ற இறை வருமானம், பெறுமதி சேர் வரியின் கீழாக இருந்த போதிலும், அதிகார சபையின் வருடாந்த இறை வருமானம் ரூபா 300 மில்லியனை விஞ்சாதிருந்தமையினால் 2020 சனவரி 06 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் பெறுமதி சேர் | பெறுமதி சேர் வரிக்காக பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

வரியின் கீழ் இல்லாதிருந்தமையை அறியத்தருகின்றோம்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 588,403,000 நட்டமாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 267,788,000 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 320,615,000 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு அரசிறை வருமானம் குறைவடைந்தமை மற்றும் அரசாங்கத்தின் மூலதன நிதி ஏற்பாட்டின் கிடைப்பவு குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அணை பாதுகாப்பு மற்றும் நீர் வள திட்டமிடல் செயற்திட்டத்திலிருந்து 2017 ஆம் ஆண்டின் போது அதிகார சபைக்கு கிடைத்திருந்த தெஹியத்தகண்டி வதிவிட வியாபார முகாமைத்துவ அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த வாகனம் ஒன்று மஹாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரின் ஆலோசனையாளரின் செய்பாடுகளுக்காக மெதிரிகிரிய வலயத்தின் சாரதி ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்தது. 2019 திசெம்பர் 22 ஆம் திகதி அந்த வாகனம் விபத்திற்கு உட்பட்டிருந்தது. நிதிப் பிரமாணம் 104(4) இன் பிரகாரம் நட்ட இழப்புக்கள் ஏற்பட்ட திகதி முதல் 03 மாதங்களுக்குள் இழப்பு சம்பந்தமான பூரணமான அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மேற்கூறப்பட்ட விபத்து ஏற்பட்டு 11 மாதங்களுக்கு அதிகமான காலம் கடந்திருந்த போதிலும், விபத்து தொடர்பாக பூரண அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த விபத்து தொடர்பாக உள்ளக கணக்காய்வு பிரிவின் மூலம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே இந்த விபத்தின் பின்னர் என்னால் நியமிக்கப்பட்ட உள்ளக குழுவின் மூலம் வாகனங்கள் பரீட்சிக்கப்பட்டு பூரண அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த வாகனம் அணை பாதுகாப்பு மற்றும் நீர் வள திட்டமிடல் செயற்திட்டத்தின் மூலம் அதிகார சபைக்கு கிடைத்திருந்தது. மதிப்பீட்டு திணைக்களத்திற்கு மதிப்பீடு செய்வதற்காக அனுப்பப்பட்ட வாகன பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட வாகனத்தில் இந்த வாகனமும் உள்ளடங்குகின்றது. மதிப்பீட்டு | நட்ட இழப்பு தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து உரிய பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடம் இருந்து அதனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வாகனத்திற்கு ஏற்பட்ட ரூபா 6,915,484 தொகையான நட்டம் உரிய பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடம் இருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. இந்த உத்தியோகத்தரினால் 2010, 2011 காலப்பகுதியில் இரண்டு வாகனங்கள் முறையற்று பயன்படுத்தப்பட்டமையினால் அதிகார சபைக்கு ஏற்பட்ட ரூபா 575,929 தொகையான நிதி ரீதியான நட்டம் 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் மதிப்பீடு இது வரையிலும் கிடைக்காதிருந்தமையினால் அது கிடைத்ததன் பின்னர் நிலையான சொத்தொன்றாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறே எனது 2021 யூன் 25 ஆம் திகதிய MA/ADM/10/02/1708 ஆம் இலக்க கடிதம் மூலம் 2021 யூலை மாதம் முதல் 10 தவணைகளில் நிறுவனத்திற்கு ஏற்பட்ட நிதி ரீதியான நட்டத்தை அறவிடுவதற்கு ஹுருலுவெவ வலயத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | அதிகார சபைக்குச் சொந்தமான 43 களஞ்சியங்கள் 2009 ஆம் ஆண்டு முதல் நெல் சந்தைப்படுத்தும் சபையினால் பயன்படுத்தப்படுகின்ற போதிலும், அந்த களஞ்சியத்திற்காக எந்தவொரு வாடகைப் பணமும் 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. அந்த களஞ்சியத்தில் நெல் களஞ்சியப்படுத்துவதற்கு நியமமிடப்பட்ட பிரகாரம் பழுதுபார்த்தல்களை மேற்கொள்ளும் தேவையொன்று காணப்படுகின்றமையினால் அந்த களஞ்சியங்களின் உரித்தை நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு கையளிக்குமாறு நெல் சந்தைப்படுத்தும் சபையின் தலைவரினால் மஹாவலி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்திடம் கோரிக்கை விடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அந்த காணியை கையளிப்பதற்கோ அல்லது வாடகைப் பணத்தை அறவிடுவதற்கோ 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும்முடியாதிருந்தது. | இந்த கையளித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அதிகார சபைக்குச் சொந்தமான நெல் சந்தைப்படுத்தும் சபையினால் கோரப்பட்ட களஞ்சிய கட்டிடங்களின் மதிப்பீட்டு அறிக்கையை பெற்றுக்கொள்வதற்கு மதிப்பீட்டு திணைக்களத்திற்கு உரிய தகவல்கள் அனுப்பப்பட்டுள்ளது. மதிப்பீட்டு அறிக்கை கிடைத்ததன் பின்னர் மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அறியத்தருகின்றோம். | களஞ்சியங்களை செயற்திறனாகவும், வினைத்திறனாகவும் பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததுடன் உரிய வாடகைப் பணமும் அறவிடப்பட வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திகன பிரதான அணை மற்றும் நீர்த்தேக்க செயற்பாட்டு பிரிவிற்குரிய மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்தின் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருந்த 05 உத்தியோகபூர்வ விடுதிகளின் உரித்தை அதிகார சபைக்கு மீள பெற்றுக் கொள்வதற்காக வழக்கு தொடரப்பட்டிருந்த போதிலும், சரியான பிரகாரம் விடுதிகளில் இவ்வாடகை செலுத்துவதற்கு இணங்கியிருந்தமை காண்பிக்கப்பட்டதன் பின்னர் அதிகார சபையினால் அந்த வழக்கு கேட்டு விலக்கப்பட்டிந்தது. எவ்வாறாயினும் அதில் ஒரு விடுதியின் உடன்படிக்கை செய்யப்பட்ட பிரகாரம் வீட்டு வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒரு விடுதியில் 2018 செப்டம்பர் 25 ஆம் திகதி தீயினால் அழிவடைந்திருந்ததுடன் குடியிருந்த அனுமதியற்ற குடியிருப்பாளர் கைவிட்டு சென்றமையின் காரணமாக வாடகை செலுத்துவதற்கான இணக்கப்பாடொன்று ஏற்படுத்தப்படவில்லை. அவ்வாறே மேலும் 06 உத்தியோகபூர்வ விடுதிகளின் உரித்தினை மீள பெற்றுக் கொள்வதற்காக 2020 ஆம் ஆண்டின் போது வழக்குத் தொடரப்பட்டு 2020 பெப்ரவரி 19 ஆம் திகதி விடுவித்தல் கட்டளை பெறப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு திகதியான 2020 திசெம்பர் | JSQ 07 உத்தியோகபூர்வ விடுதிகள் கனிஷ்ட பதவியணியினரின் ஊழியர்களுக்கான தனிப்பட்ட வீடுகள் (தனி அறையுடன்) ஆக இருந்தமையினால் 12.5 சதவீதம் அறவிடுவதற்கு முடியாதிருந்தது. இதன் பிரகாரம் நியாயமான வாடகையொன்று அரசாங்கத்தின் மதிப்பீட்டு தொகைக்கு இணங்கும் வகையில் வாடகையொன்று மாதாந்தம் அறவிடப்படுகின்றது. இதில் குறிப்பிடப்பட்ட வீடுகளின் உரித்தை மீள கையேற்பதற்கு வழக்குத் தொடரப்பட்டு 2020 பெப்ரவரி 19 ஆம் திகதி விடுவித்தல் கட்டளை கிடைத்திருந்தது. நாட்டில் ஏற்பட்ட கொவிட் - 19 தொற்று நோய் நிலைமையின் காரணமாக மிகுதி நீதிமன்ற நடவடிக்கைகள் காலம் தாழ்த்தப்பட்டிருந்தது. அதன் பின்னர் எங்கள் உத்தியோகத்தரினால் விடுவித்தல் கட்டளை அமுல்படுத்துவதற்காக பல தடவைகள் நீதிமன்றத்தின் பதிவாளரை சந்தித்து திகதியை நிர்ணயித்துக் கொள்வதற்கு முயற்சி எடுக்கப்பட்டிருந்தது. மிகுதி நடவடிக்கைகளை அமுல்படுத்துதல் பிற்போடப்பட்டதாக பதிவாளரினால் அறிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 73-A மற்றும் 221-A என்ற உத்தியோகபூர்வ விடுதிகளில் குடியிருப்பாளர்கள் கட்டளைகளை அமுல்படுத்துவதற்கு முன்னர் விலகிச் சென்றிருந்தனர். அதன் | உத்தியோகபூர்வ விடுதிகளுக்கான உரித்து இல்லாத குடியிருப்பாளர்களை வீடுகளில் இருந்து அகற்றுவதற்கு தேவையான சட்ட ரீதியான நடவடிக்கைகள் பின்பற்றப்பட வேண்டியிருந்ததுடன், நிலுவை வாடகை மற்றும் உத்தியோகபூர்வ விடுதிகளுக்கு ஏற்பட்ட நட்டம் மற்றும் இழப்புக்கள் பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடம் இருந்து அறிவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வரை 05 உத்தியோகபூர்வ விடுதிகளின் உரித்து அதிகார சபைக்கு பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே விடுவித்தல் கட்டளை கிடைத்த ஒரு விடுதியொன்று 2020 ஒக்டோபர் 21 ஆம் திகதி தீ அனர்த்தத்திற்கு உட்பட்டிருந்தது. தீ இழப்பின் அண்ணளவான மதிப்பீடு ரூபா 1,225,875 ஆக இருந்ததுடன், அறவிட வேண்டிய நிலுவை வாடகை ரூபா 205,320 ஆகும். கணக்காய்வு திகதியில் உள்ளவாறு இந்த நட்டத்தை அறவிடுவதற்காக மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிரகாரம் கணக்காய்வு திகதி வரையில் 03 விடுதிகளின் உரித்து பெற்றுக் கொள்ளப்பட்டிருந்துடன், அவற்றின் பராமரிப்பு நடவடிக்கைகள் அதிகார சபையினால் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 188-B உத்தியோகபூர்வ வீடு தீ பிடிப்பிற்கு உட்பட்டு அழிவடைந்ததுடன், அனுமதியற்ற குடியிருப்பாளர் விலகிச் சென்றிருந்ததார். தீ பிடிப்பிற்கு உட்பட்ட அந்த உத்தியோகபூர்வ விடுதி தொடர்பாக மிகுதி சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. மிகுதி 02 விடுதிகளுக்காக திசெம்பர் மாதம் 28 ஆம் திகதி விடுவித்தல் கட்டளை அமுல்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இது வரையில் 04 விடுதிகள் மஹாவலி அதிகார சபையின் உரித்துக்கு கையேற்கப்பட்டுள்ளதுடன், ஏனைய 02 விடுதிகளுக்காக ஏப்ரல் மாதத்தில் அமுல்படுத்துவதற்கு நீதிமன்றத்தின் மூலம் திகதி ஒதுக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | திகன பிரதான அணை மற்றும் நீர் தேக்க செயற்பாட்டு பிரிவு மற்றும் போவத்தென்ன பணிப்பொறுப்பு பொறியியலாளர் அலுவலகத்தின் பராமரிப்பு மற்றும் சேவை நடவடிக்கைகளுக்காக ஊழியர்களை பெற்றுக் கொள்ளும் போது அந்த ஒப்பந்த உடன்படிக்கையின் 4.9 ஆம் பிரிவின் பிரகாரம் ஒப்பந்தகாரரின் ஆவணங்கள், செக்ரோல், காத்திருத்தல் பட்டியல் அல்லது இந்த உடன்படிக்கைக்கு உரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு | பராமரிப்பு நடவடிக்கைகளுக்கு தேவையான ஊழியர்கள் சமூக அடிப்படையிலான அமைப்புக்களினால் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றனர். இந்த ஊழிய ஒப்பந்தத்தின் பிரகாரம் பராமரிப்பு பிரிவின் நாளாந்த பணிகளுக்காக ஊழியத்தை அந்த அமைப்பின் மூலம் பராமரிப்பு பிரிவின் கோரிக்கையின் வேண்டுதலின் பிரகாரம் வழங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றது. அதன் பிரகாரம் ஒவ்வொரு பணிப்பொறுப்பு பொறியியலாளர் அலுவலகத்திற்காக நாளாந்தம் திட்டமிடப்பட்ட பராமரிப்பு பணிகளுக்காக தேவையான | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் விவசாய அமைப்பினால் பேணிச் செல்லப்பட வேண்டிய பதிவேடு பேணிச் செல்லப்படுகின்றதா என மஹாவலி அதிகார சபையினால் பின்தொடர் நடவடிக்கைள் மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன், மஹாவலி அதிகார சபையின் மேற்பார்வையின் கீழ் ஊழியர்களின் நாளாந்த வருகை மற்றும் வெளிச் |

சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஊழியர்கள் தொடர்பாக ஏனைய ஆவணங்களை பரீட்சிப்பதற்கு முடியுமான வகையில் இந்த ஆவணங்கள் பேணிச் செல்லப்பட வேண்டியிருந்த போதிலும், அந்த ஆவணங்கள் விவசாய அமைப்பின் பிரதிநிதி அல்லது அதிகார சபையினால் முறையான பேணிச் செல்லப்படாமையினால் அந்த கொடுப்பனவுகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. மேலும் பிரதான அணை மற்றும் நீர்த்தேக்க செயற்பாட்டு பிரிவின் பராமரிப்பு நடவடிக்கைகள் மற்றும் சேவை நடவடிக்கைகளுக்காக தேவையான ஊழியர்களை பெற்றுக் கொள்ளல் நீண்ட காலமாக தொடர்ச்சியாக ஒரே ஒரு விவசாய அமைப்பினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த ஊழியர்களின் நாளாந்த வருகை மற்றும் வெளிச்செல்கை மற்றும் மேற்கொள்ளப்பட்ட வேலை அளவு, சேவையினை பெற்றுக் கொண்ட மேற்பார்வை உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில் லை.

பயிற்சி, அரைப் பயிற்சி மற்றும் பயிற்சி பெறாத தொழிலாளர்கள் தொடர்பான தகவல்கள் பிரதான அணை நீர்த்தேக்க செயற்பாட்டு பிரிவின் பராமரிப்பு பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. பராமரிப்பு பணிகளுக்காக ஒவ்வொரு பணிப்பொறுப்பு பொறியியலாளர் அலுவலகத்திற்கும் ஊழியர்களை ஈடுபடுத்துதல் அந்த பிரிவின் தொழில்நுட்ப உதவியாளரினால் மேற்கொள்ளப்படுவதுடன், நிறைவேற்றப்படுகின்ற பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் அந்த பிரிவின் பொறியியல் உதவியாளர் இருவரினால் மேற்பார்வை செய்யப்படுகின்றது. உத்தேசிக்கப்பட்ட பழுதுபார்த்தல்கள் முடிவடைந்ததன் பின்னர் உரிய தரப்பினரால் பழுதுபார்த்தல்களை ஏற்றுக் கொள்ளும் வகையில் நிறைவேற்றப்பட்டமை தொடர்பாக எழுத்து மூல உறுதிப்படுத்தல் சமர்ப்பிக்கப்படுகின்றது. இந்த முறையில் நாளாந்தம் மேற்கொள்ளப்படுகின்ற பழுதுபார்த்தல்கள் யாவும் மாதாந்த செயல்முன்னேற்ற அறிக்கையில் உள்ளடக்கப்பட்டு பிரதான அணை மற்றும் நீர்த்தேக்க செயற்பாட்டு பிரிவின் பராமரிப்பு பிரிவு தலைவரான பிரதி பணிப்பாளர் (சிவில்) அவருக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது. இந்த ஒப்பந்தத்திற்காக மாதாந்தம் பகுதி பகுதியாக செலுத்தப்படுவதுடன், செலுத்தும் நடவடிக்கைகளின் போது பிரதி பணிப்பாளர் (சிவில்) இனால் உரிய மாதாந்த அறிக்கை பரீச்சிக்கப்பட்டு கொடுப்பனவுகள் அங்கீகரிக்கப்படுகின்றது. ஐய செல்லல் பதிவேடு (விவசாய அமைப்பின் கடித தலைப்புடன்) பேணிச் செல்லப்பட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | | வினாவில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் சங்கத்திலிருந்து அனுப்பப்படுகின்ற ஊழியர்களின் விபர பதிவேடு உரிய ஒப்பந்த சங்கத்தினால் பேணிச் செல்லப்படுவதுடன், எங்களது அலுவலகத்தின் மூலம் ஊழிய அலகுகளின் எண்ணிக்கை மாத்திரம் புத்தகங்களில் குறிப்பிடப்படுகின்றது. அதன் காரணமாக அதற்கு முன்னரான சந்தர்ப்பங்கள் பலவற்றின் போது ஊழியர் உரித்து தொடர்பாக (EPF கொடுப்பனவு) பிரச்சினையொன்று ஏற்பட்டிருந்தமையினால் தொழிலாளர்களின் உரித்து தொடர்பான பொறுப்பு உரிய சங்கத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தமை ஒப்பந்த உடன்படிக்கை திருத்தத்தினால் ஏற்பட்டதாகும். | |
| (இ) | 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு அதிகார சபையின் காணி முதலீட்டு செயற்திட்டத்திற்காக நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்குதல் தொடர்பான கணக்காய்வின் போது 10 வலயங்களின் தகவல்கள் கோரப்பட்டிருந்த போதிலும், 05 வலயங்களுக்காக மாத்திரம் குறித்த மாதிரி படிவத்தின் பிரகாரம் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக அதிகார சபையினால் முதலீட்டு செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட காணிகளின் அபிவிருத்தி தொடர்பான ஒட்டுமொத்த நிலைமையை கணக்காய்வு செய்வதற்கு முடியாதிருந்தது. தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்ட 05 வலயங்களின் முதலீட்டு | மஹாவலி எல் வலயம், ரம்புக்கன் ஓயா, மொறகஹகந்த என்ற வலயங்களில் முதலீட்டு செயற்திட்டங்களில் 60 காணிகள் அளவில் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அதன் பரப்பளவு 2600 ஏக்கர் அளவாகும். ரம்புக்கன் ஓயா வலயத்தில் 04 முதலீட்டாளர்களுக்காக 1250 ஏக்கர் அளவில் போகப் பயிர் செய்கைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அவர்கள் காணி பயிர்ச் செய்கைக்காக தயார்படுத்தும் பொது அதற்கு எதிராக நடைபெற்ற பொதுமக்கள் எதிர்ப்பின் காரணமாக அபிவிருத்திக்கு இடையூறுகள் ஏற்பட்டிருந்தது. அதன் பிரகாரம் உரிய காணியில் 1250 ஏக்கர் 04 முதலீட்டாளர்களுக்கு வழங்குதல் தொடர்பாக | காணிகளை வழங்கும் நோக்கங்களை நிறைவேற்றக் கூடிய வகையில் காணி அபிவிருத்தி தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததுடன், அபிவிருத்தி செய்யப்படாத காணிகளை மீண்டும் கையேற்று பொருத்தமான பணிகளுக்காக பயன்படுத்த வேண்டும். நிலுவை வாடகையை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்ட காணியின் அளவு 5,755 ஏக்கர் ஆக இருந்ததுடன், அதில் எந்தவொரு அபிவிருத்தியும் செய்யப்படாத காணியின் அளவு 2,121 ஏக்கர் ஆக இருந்த போதிலும், அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள காணி அளவு 496 ஏக்கர் ஆகவும் முழுமையாக அபிவிருத்தி செய்யப்பட்ட காணியின் அளவு 3,138 ஏக்கர் ஆகவும் காணப்பட்டது. அதன் பிரகாரம் வழங்கப்பட்ட மொத்த காணியின் அளவில் 37 சதவீதத்தில் எந்தவொரு அபிவிருத்தியும் செய்யப்பட்டிருக்கவில்லை. கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்கள் 07 வலயங்களின் காணிகள் வழங்கப்பட்ட 123 முதலீட்டாளர்களிடம் இருந்து 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 68,598,808 தொகையான வாடகைப் பணமொன்று அறவிட வேண்டி காணப்பட்டது.

அமைச்சரவை அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் சுற்றாடல் பரிந்துரை மற்றும் செயலாற்றலின் அடிப்படையில் செயற்திட்ட காணிகளை ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் செப்டம்பர் மாதம் வரையிலும் சகல வாடகை செலுத்தாத முதலீட்டு செயற்திட்டங்களின் காணிகளை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எல் வலயத்தின் காணி அபிவிருத்தி செய்வதற்காக சுற்றாடல் அதிகார சபையின் தொல்பொருள் திணைக்களத்தினதும் வனவிலங்குகள் திணைக்களத்தினதும் அங்கீகாரம் கிடைக்கப் பெறாமையின் அடிப்படையில் அபிவிருத்தி செய்வதற்கு முடியாதிருந்தது. அதற்காக பன்சல்கந்த பிரதேசத்தில் ஒதுக்கப்பட்டுள்ள 05 முதலீட்டாளர்களிடம் இருந்து காணியினை மீண்டும் அரசாங்கத்திற்கு கையேற்று விலங்குகளை மாற்றீடு செய்யும் நிலையமொன்றாக பேணிச் செல்லுதல் தேவையாக இருந்தது. அதன் பிரகாரம் தற்போது வரையில் கையேற்கப்பட்ட 05 காணி கூறுகளுக்காக மாற்று காணிகளை வழங்குதல் தொடர்பாக கலந்துரையாடல் நடைபெறுகின்றது.
மொறகஹகந்த வலயத்தில் 08 முதலீட்டாளர்களுக்காக 80 ஏக்கர் அளவு ஒதுக்கப்பட்டுள்ளதுடன், அதனிடையே 04 காணிக் கூறுகளில் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு செல்லப்படுகின்றது. சுற்றுலா

| | | | |
|---|---|---|---|
| | | செயற்திட்டத்திற்காக 03 காணிக் கூறுகள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், அந்த செயற்திட்டத்தின் அபிவிருத்திக்காக உட்கட்டமைப்பு வசதிகள் பூர்த்தி செய்யப்படாதிருந்தமையினால் செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்தது. அதன் பிரகாரம் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்காக தற்போது அதிகார சபை நடவடிக்கை எடுக்கின்றது. அவ்வாறே பீ, சீ, ஈ, எச், வலவ, ஹுருலுவெவ வலயங்களில் முதலீட்டு செயற்திட்டங்கள் தொடர்பான விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | 1947 இன் 08 ஆம் இலக்க அரசாங்க காணி கட்டளைச் சட்டத்தின் 199(3) ஆம் பந்தியின் பிரகாரம் அரசாங்கத்தின் காணிகள் தொடர்பாக சகல தெரிவு வாடகைக்கும் அரசாங்கத்தின் காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட 21(1) பிரமாணத்தின் கீழ் அமைச்சரின் முன் எழுத்து மூல முன்அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும், முன் எழுத்து மூல அங்கீகாரம் இன்றி ரம்புக்கன் ஓய வலயத்தில் 3,750 ஏக்கர் காணியின் உரித்து முதலீட்டாளர்கள் 07 பேருக்கு கையளிப்பதற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியிருந்தது. அவ்வாறே இந்த காணிகளின் உரித்தினை கையேற்பதற்கு முன்னர் எந்தவொரு சுற்றாடல் தாக்கம் தொடர்பாகவும் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த காணிக்காக போட்டியாளர்கள் | ரம்புக்கன் ஓயா வலய முதலீட்டாளர்களில் நான்கு பேருக்கு 1250 ஏக்கர் அளவில் அரச கொள்கையின் பிரகாரம் இறக்குமதி செய்யப்படுகின்ற உணவு பயிர்வ் செய்கை உற்பத்தி இலக்கை பூர்த்தி செய்து கொள்வதற்காக தேசிய உணவு உற்பத்தி செயலாற்றல் குழு மற்றும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பணிப்பாளர் நாயத்தினால் தற்காலிகமாக போகமொன்றிற்காக வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. வாடகைக்கு வழங்கப்பட்டதன் பின்னர் ஏற்பட்ட பொதுமக்கள் எதிர்ப்பின் காரணமாக உரிய காணிப் பகுதியை அபிவிருத்தி செய்வதற்கு இடையூறு ஏற்பட்டிருந்தது. அதனால் இந்த காணிப் பகுதியை வாடகைக்கு வழங்குவதற்கு அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு அமைச்சரவை குறிப்பொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அதன் போது இந்த காணி முதலீட்டிற்கு வழங்குவதற்கு | வணிக நடவடிக்கைகளுக்காக காணியினை ஒதுக்கீடு செய்யும் போது போட்டியாளர் மற்றும் வெளிப்படையான விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்ய வேண்டியிருந்ததுடன், தெரிவு வாடகை அடிப்படையில் வழங்கும் போது அரசாங்கத்தின் காணி கட்டளைச் சட்டத்தின் 199 மற்றும் 206 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

மற்றும் வெளிப்படையாக இருக்க வேண்டிய விண்ணப்பம் கோரல்கள் இன்றி தேசிய உணவு உற்பத்தி செயலாற்றல் குழுவிற்கு அனுப்பப்பட்டு முதலீட்டாளர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டிருந்தன. 1947 இன் 08 ஆம் இலக்க அரசாங்கத்தின் காணி கட்டளைச் சட்டத்தின் 199(4) ஆம் பந்தியின் பிரகாரம் அமைச்சரினால் வேறொரு முறையில் கட்டளையிடப்பட்டாலன்றி வழங்கல் பத்திரங்கள் பிணை முறிகளை விநியோகிப்பதற்கு கருத்து தெரிவிக்கப்படுகின்ற ஒவ்வொரு தடவையும் அது தொடர்பாக கட்டளையொன்று 21(2) ஆம் இலக்க அரசாங்கத்தின் காணி பிரமாணத்தின் கீழ் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டிய போதிலும். அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில் லை. காணியினை ஒதுக்குவதற்கு எதிராக வெளித்தரப்பினர்களினால் நீதிமன்ற நடவடிக்கைகளை எடுத்ததன் காரணமாக முதலீட்டு செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கும் முடியாதிருந்தது.

முன்னர் சுற்றாடல் மதிப்பீடொன்றை உள்ளடக்கிய ஆரம்ப பயிர்ச் செய்கை நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் பெறப்பட்ட விளைவுகள் தொடர்பாக விபர அறிக்கையொன்றை கவனத்தில் கொள்ளும் வகையில் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரம்புக்கன் ஓயா வலயத்தில் இந்த 7 முதலீட்டாளர்களுக்கு நீண்ட கால வாடகையின் கீழ் காணி வழங்கப்படவில்லை.

காணியினை வழங்கும் திட்ட முறைமையினை முறைமைப்படுத்துதல், அதிகார சபைக்கு சொந்தமான விஷேட பிரதேசங்களின் காணி ஒதுக்குதல் தொடர்பாக நீர்ப்பாசன அமைச்சின் செயலாளரின் சுற்றறிக்கை இலக்கம் 1/2021 இன் மூலம் அரசாங்க காணியினை ஒதுக்கீடு செய்யும் போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகளை முறைமைப்படுத்துதல் தொடர்பாக சகல வதிவிட வியாபார முகாமையாளர்களுக்கும் காணி ஒதுக்குதல் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற பிரிவிற்கும் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அரசாங்க காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் மற்றும் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் மஹாவலி அதிகார சபையினால் காணியினை வழங்கும் திட்ட முறைமை வெளிப்படையானதாகவும் முறையானதாகவும் மேற்கொள்ளல் தொடர்பான தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

### 3.3 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அணை பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் திட்டமிடல் செயற்திட்டத்தின மூலம் ரூபா 339,584,727 தொகையான செலவில் நிர்மாணிக்கப்பட்ட 2019 ஆம் ஆண்டில் அதிகார சபைக்கு கையளிக்கப்பட்ட பொால்கொல்ல நீர்த்தேக்க கட்டுப்பாட்டு நிலைய கட்டிடம் 02 மாடிகளை உள்ளடக்கியிருந்த போதிலும், போதியளவான பிரகாரம் பதவியணியினர் ஒன்று அதில் நியமிக்கப்படாதிருந்தமையினால் அந்த கட்டிடம் குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டது. | இந்த நிலையம் 2018 யூன் மாதம் முதல் பொல்கொல்ல பணிப்பொறுப்பு பொறியியலாளரின் மேற்பார்வை மற்றும் மின்சார பொறியியலாளரின் கட்டுப்பாட்டின் கீழ் அமுல்படுத்தப்படுவதுடன், வெள்ள கட்டுப்பாடு இணைப்பு, சகல அணை மேற்பார்வை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மாநாடுகள் மற்றும் பல்வேறு கூட்டங்களை நடத்துதல் போன்ற செயற்பாடுகளுக்காக தற்போது பயன்படுத்தப்படுகின்றது. விஷேடமாக ஒவ்வொரு வருடமும் அரை இறுதியில் அதாவது நவம்பர், திசெம்பர் மாதங்களின் போது காலநிலை தாக்கத்தின் காரணமாக எதிர்பாராத வகையில் ஏற்படுகின்ற அதிக மழை வீழ்ச்சினால் ஏற்படுகின்ற வெள்ள நிலைமையை கட்டுப்படுத்துவதற்காக சகல நீர்த்தேக்க முறைமைகளுடன் தேவையான செயற்பாடுகளை தொடர்புபடுத்துதல். 2020 ஆம் ஆண்டின் ஆரம்பம் முதல் Covid - 19 தொற்று நோய் பரவலை கட்டுப்படுத்தும் நிலையின் கீழ் கணிசமான அணைகளுக்காக உள்ளக தேசிய ஆணைக்குழு (ICOLD) நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற சர்வதேச மாநாடுகளுக்காக ZOOM தொழில்நுட்பத்தின் மூலம் பொறியியலாளர்களை பங்குபற்றச் செய்தல், தற்போதுள்ள காலநிலை தரவுகள், நீர் தேக்கங்களின் நீர் மட்டம் மற்றும் கொள்ளளவை உள்ளடக்கிய தரவுகள், அணை பாதுகாப்பிற்காக ஒதுக்கப்பட்டுள்ள உபகரணங்களின் தரவுகள் போன்றவை பணிப்பொறுப்பு பொறியியலளார் அலுவலகத்துடன் தொடர்புபடுத்தப்படுகின்றது. எவ்வாறாயினும் இந்த கட்டிடத்தில் பதவியணியினரை நியமிப்பதற்காக அடுத்தாலுள்ள கட்டிடத்தை | கட்டிடங்களை பூரணமாக பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | விடுவிக்கும் வகையில் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு தொடர்ந்தும் அறிவித்தல் வழங்கப்பட்ட போதிலும் அந்த கட்டிடம் விடுவிக்கப்படாமையின் காரணமாக திகன அலுவலகத்தின் பதவியணியினரை இதற்காக நியமிப்பதற்கு முடியாதிருந்தது. | |

**3.4 ஒப்பந்த நிர்வாகத்தின் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகார சபையினால் ரூபா 3,386,358 தொகையில் றன்டெம்பே பணிப்பொறுப்பு பொறியியலாளர் அலுவலத்தை பழுதுபார்ப்பதற்காக உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த போதிலும், உடன்படிக்கை காலத்தில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. 08 சந்தர்ப்பங்களின் போது ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டிருந்த போதிலும், வேலையினை பூர்த்தி செய்வதற்கு முடியாமையின் காரணமாக ஒப்பந்தம் கைவிடப்பட்டிருந்தது. எனினும், ஒப்பந்தத்திற்கு உரிய ரூபா 169,318 தொகை பெறுமதியான செயலாற்றல் பிணை முறியினதும் ரூபா 1,015,907 பெறுமதியான முற்பண பிணையும் பணமாக அறவிடப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக ஆற்றப்பட்ட வேலையினை விஞ்சி கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட ரூபா 949,015 தொகையை அறவிடுவதற்காக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மிகுதி வேலையின் அளவு மதிப்பீடு செய்யப்பட்டு புதிய ஒப்பந்தகாரருக்கு வழங்குவதற்கோ அல்லது பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்படாமையின் காரணமாக இந்த அலுவலக கட்டிடத்தை | ஒப்பந்தத்திற்குரிய ரூபா 169,318 பெறுமதியான செயலாற்றல் பிணை முறியை பணமாக அறவிடுவதற்காக முகாமையாளர் மக்கள் வங்கிக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறே இந்த ஒப்பந்தத்திற்கு உரிய முற்பண பிணை முறியான ரூபா 1,015,907 தொகையை அறவிடுவதற்காக முகாமையாளர் மக்கள் வங்கிக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தகாரரிடம் இருந்து பணத்தை அறவிடுவதற்காக சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த ஒப்பந்தத்தை பூர்த்தி செய்து ஒப்பந்தத்திற்கான வேலை செய்யப்பட்ட பகுதிக்காக கொடுப்பனவை நிறுத்துவதற்கு | ஆற்றப்பட்ட வேலையினை விஞ்சி மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ள பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன், கட்டிடத்தை பழுதுபார்த்து பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்துவதற்கு முடியாததாக காணப்பட்டது. | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தகாரரிடம் இருந்து உரிய பணம் அறவிடப்பட்டதன் பின்னர் மிகுதி வேலைப் பகுதிக்காக 2021 ஆம் ஆண்டில் வேறொரு ஒப்பந்தத்தின் மூலம் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | |
| (ஆ) | ஒப்பந்த பெறுமதி ரூபா 2,376,972 தொகையான மஹாவலி பாதுகாப்பு படையணியின் உத்தியோகபூர்வ விடுதிகளை பழுதுபார்க்கும் ஒப்பந்தத்திற்காக தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரருக்கு 2020 சனவரி 30 ஆம் திகதி கையளிப்புக் கடிதம் அனுப்பப்பட்டிருந்த போதிலும் அத்திகதி முதல் 14 நாட்களுக்குள் வேலை ஆரம்பிக்கபட வேண்டியிருந்த போதிலும், அதன் பிரகாரம் வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. பின்னர், ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்ததன் பின்னர் அதிகார சபையினால் 2021 பெப்ரவரி 17 ஆம் திகதி அந்த ஒப்பந்த வழங்கல் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையின் காரணமாக இந்த உத்தியோகபூர்வ விடுதிகள் மேலும் உடைந்த நிலைமையில் பாவனைக்கு பொருத்தமற்ற நிலைமைக்கு உட்பட்டிருந்தது. | 2021 பெப்ரவரி 17 ஆம் திகதிய DDG/CON/MSO/DIG/B3 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் உரிய ஒப்பந்த வழங்கல் கையளிக்கப்பட்டிருந்தது. எஸ்.எஸ்.பீ இன்ஜினீயர்ஸ் இற்கு செலுத்தப்பட்ட DDG/CON/MSO/DIG/B/04 ஆம் இலக்க ஒப்பந்தத்தின் இறுதி கொடுப்பனவு செய்ய வேண்டிய தொகையில் உரிய கேள்வி பாதுகாப்பு காப்பீட்டுக் கட்டணம் ரூபா 35,000 தொகை அறவிடப்பட்டிருந்தது. எதிர்வரும் ஆண்டில் உத்தேசிக்கப்பட்ட நிதி ஏற்பாட்டின் பிரகாரம் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளைச் செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | கையளிப்பு கடிதத்தின் பிரகாரம் வேலை ஆரம்பிக்கப்படாதிருக்கு மாயின் உரிய கையளித்தலை இரத்துச் செய்ய வேண்டியிருந்ததுடன், வேறு ஒப்பந்தகாரருக்கு வழங்கி உரிய பழுதுபார்த்தல் நடவடிக்கைகளைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | கொத்மலை பணிப்பொறுப்பு பொறியியலாளர் அலுவலகத்தில் காணப்படுகின்ற பார்வையாளர் மேடையினை மீளமைப்பதற்காகவும் பழைய அணை மாதிரியை அகற்றி புதிய அணை மாதிரியொன்றை தயாரிப்பதற்காக 2017 ஆம் ஆண்டில் ரூபா 6,990,000 | இந்த ஒப்பந்தம் பார்வையாளர் மேடையினை மீளமைத்தல் மற்றும் நவீன மயப்படுத்தல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் சகல பிரிவுகளும் மற்றும் விஷேட பிரிவுகளிலும் | நிர்மாண ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் நியமத்துடன் மேற்கொள்ளல் மற்றும் உடன்படிக்கையை முறித்ததன் அடிப்படையில் ஏற்பட்ட நட்டத்தினை வெளிப்படுத்தக் கூடிய |

தொகையில் ஒப்பந்தமொன்று கையளிக்கப்பட்டுள்ளதுடன், அதில் ரூபா 2,060,000 தொகையான மதிப்பீடொன்றுடன் அணை மாதிரிகள் வழுக்களுடன் மற்றும் குறைவான தரத்தில் தயாரிக்கப்பட்டிருந்தது.
ஒப்பந்தத்தை கையளிக்கும் போது செயலாற்றல் பிணை முறியொன்றை பெற்றுக் கொள்ளாமையினால் உடன்படிக்கையின் பிரகாரம் பணிகளை பூர்த்தி செய்யாமையினால் அதிகார சபைக்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

பொருத்தமான அளவிற்கு இணங்க சிறந்த அணை மாதிரி காணப்படுகின்ற காணி அளவில் நிர்மாணிக்கும் வகையில் பிரதானமாக இரண்டு பகுதிகள் உள்ளன. இந்த இரண்டு பகுதிகளிலும் முதலாவது பகுதி ஒப்பந்தகாரரால் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டமையினால் அதற்காக உரிய தொகை செலுத்தப்பட்டிருந்தது.
அணை மாதிரியின் வழு மற்றும் குறைவான தரத்துடன் உள்ளமை தொடர்பாக பணிப் பொறுப்பு பொறியியலாளரினால் வாய்மூல மற்றும் எழுத்து மூலமாக பல சந்தர்ப்பங்களின் போது ஒப்பந்தகாரருக்கு அறிவிக்கப்பட்ட போதிலும், எந்தவொரு நல்ல பதிலும் கிடைத்திருக்கவில்லை.
அதன் பிரகாரம் இந்த வழுக்களுடன் உள்ள அணை மாதிரி நிராகரிக்கப்பட்டதுடன், அதற்காக எந்தவொரு தொகையும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. அந்த மாதிரி பார்வையாளர் மேடைக்கு வருகை தருகின்ற பார்வையாளர்களுக்காக காட்சிக்குப் பொருத்தமான தரத்தில் இல்லாமையினால் இந்த பார்வையாளர் மேடையினை அகற்றுமாறு ஒப்பந்தகாரருக்கு அறிவிக்கப்பட்ட போதும் இது வரையிலும் அது அகற்றப்பட்டிருக்கவில்லை. இதற்காக சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அனுப்பப்பட்டுள்ளது.

வகையில் மேவுகை செய்யக் கூடிய வகையில் செயலாற்றல் காப்பீட்டை பெற்றுக் கொள்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

**3.5 மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மஹாவலி பாதுகாப்பு படையணிக்குரிய 25 உத்தியோகத்தர்கள் ஏனைய வெளி நிறுவனங்களின் சேவையில் ஈடுபட்டிருந்ததுடன், அந்த உத்தியோகத்தர்களுக்காக செலுத்தப்பட்ட சம்பளம் ரூபா 6,187,072 தொகையை அந்த நிறுவனங்களில் இருந்து மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விவசாய அமைச்சினாலும் நீர்ப்பாசன அமைச்சினாலும் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையினை கவனத்தில் கொண்டு பாதுகாப்பு தரப்பினருக்கு ஏனைய அமைச்சு மற்றும் சேவை நிலையங்களுக்காக நியமிக்கப்பட்டிருந்தனர். எனினும் அந்த உத்தியோகத்தர்களின் சம்பளம் அதிகார சபையின் மூலம் செலுத்தப்பட்ட போதிலும், அந்த பணத்தை மீளளிப்பு செய்வதற்காக இது வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய கொடுப்பனவுகளை மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு மஹாவலி பாதுகாப்பு படையணியில் 04 பதவிகளில் 15 உத்தியோகத்தர்களின் மிகையும், 07 பதவிகளில் 77 உத்தியோகத்தர்களின் வெற்றிடமும் காணப்பட்டன. மேலும் பாதுகாப்பு படையணிக்குரிய 11 பாதுகாப்பு படையணியினர் தொடர்ச்சியாக நியமிக்கப்படாமல் பாதுகாப்பு கடமைகளுக்கு பதிலாக திகன மஹாவலி பாதுகாப்பு படையணியின் பிரதான அலுவலகத்தின் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | மஹாவலி பாதுகாப்பு படையணிக்காக அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை காணப்பட்ட போதிலும் அந்த ஊழியர் எண்ணிக்கை அங்கீகரிக்கின்ற சந்தர்ப்பத்தின் போது காணப்பட்ட ஊழியர் தேவையை விட தற்போது அதிகமான உத்தியோகத்தர்களின் தேவையொன்று காணப்பட்டது. அவ்வாறே பொறியியல் உதவியாளர் பதவி மஹாவலி பாதுகாப்பு படையணிக்கு அங்கீகரிக்கப்படாதிருந்த போதிலும், அந்த படையணியின் இணைந்த மற்றும் அதிகார பிரதேச அலுவலகம் மற்றும் உத்தியோகபூர்வ | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை தேவையின் பிரகாரம் திருத்தப்பட வேண்டியிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்காக உரிய உத்தியோகத்தர்கள் சேவையில் நியமிக்கப்பட வேண்டும். |

விடுதிகள் மற்றும் கட்டிடங்களின் பராமரிப்பு பணிகள் தொடர்பாக பொறியியல் உதவியாளரின் தேவையொன்று எழுந்திருந்தமையினால் நியமிக்கப்பட்டிருந்தனர். அவ்வாறே பிரதேச முகாமைத்துவ பதவிகளில் இரண்டு 2011 ஆகஸ்ட் 22 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்ட அதிகார சபையின் ஊழியர் எண்ணிக்கையில் உள்ளடக்கப்படாதிருந்த போதிலும் அது வரையில் சேவையில் ஈடுபட்டிருந்த பிரதேச முகாமையாளர்கள் இருவர் அவர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட ரீதியில் அந்த பதவியில் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மேலும், பணம் அறவிடுபவர் பதவியாக பாதுகாப்பு பிரிவில் உள்ளடக்கப்படாதிருந்த போதிலும், பிரதான அணை மற்றும் நீர்த்தேக்க செயற்பாட்டு பிரிவின் கீழ் பாதுகாப்பு சேவையை வழங்கும் பிரிவினர் உணவு பானம் தயாரிக்கும் செயற்பாடுகள் இந்த ஊழியர்களின் மூலம் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சாரதிகள் மற்றும் பாதுகாப்பு படையணியின் இரண்டு பதவிகளின் ஆட்சேர்த்தல் மேற்கொள்ளாமைக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் ஆலோசனை கிடைக்கப் பெற்றுள்ளது.